நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## M.C. No. 2/2024

## R.W. 2 –ன் வாக்குமூலம்

**(எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சரவணன் |
| தந்தை / கணவர் பெயர் | : | சுந்தராஜன் |
| கிராமம் | : | வனவாசி |
| வட்டம் | : | மேட்டு'ர |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **RW 2** |
| வயது | : | 40 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 12–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.30 AM)

1. எனது பெயர் சரவணன். நான் வனவாசி தபால் நிலையத்தில் பொறுப்பு தபால் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் நேரில் ஆஜராகி சாட்சி கூறுகிறேன்.

2. சுரேஷ்குமார் என்பவரின் மகள் அர்ச்சனா என்பவர் பெயரில் எங்களது தபால் நிலையத்தில் தலா 3 லட்சத்துக்கு இரண்டு நிரந்தர வைப்பீடுகளும் இரண்டு லட்சத்துக்கு தலா இரண்டு நிரந்தர வைப்பீடுகளும் செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் அவரது பெயரில் ரூபாய் 10 லட்சம் நிரந்தர வைப்பதாக எங்களது தபால் நிலையத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நான்கு வைப்பீடுகளும் கடந்த 18.09.2021–ஆம் அர்ச்சனா என்பவர் தான் எங்களது தபால் நிலையத்தில் அவரது பெயரில் வைப்பீடு செய்துள்ளார்.

3. மேற்படி நான்கு நிரந்தர வைப்பீடு கணக்கும் கடந்த 22.04.2025–ஆம் தேதி முடிக்கப்பட்டு பணம் மறுநாள் திரும்ப வழங்கப்பட்டது. மேற்படி வைப்பீடு செய்ததற்கான வட்டி தொகை சேர்த்து மொத்தமாக ரூபாய். 11,42,000/– பெற்றுக்கொண்டார். மேற்படி நிரந்தர வைப்பீடு அவர் வைத்திருந்த சேமிப்பு கணக்கு மூலமாக செய்யப்பட்டது. மேற்படி சேமிப்பு கணக்கு காண அறிக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். (**மேற்படி 18.09.2022 தேதி முதல் 23.04.2025 தேதி வரையிலான 10.05.2025 தேதியிட்ட கணக்கு அறிக்கை எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நான்கு நிரந்தர வைப்பீடுகள் தொடங்கப்பட்டதற்கான விண்ணப்ப படிவம் லெட்ஜர் பதிவேடு ஆகியவை எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கொடுத்த ஆவணங்களில் 18.09.2021 தேதி கணக்குகள் தொடங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ.4 நிரந்தர வைப்பீடு செய்வதற்கான விண்ணப்ப படிவத்தில் மனுதாரர் என்ற இடத்தில் கே எஸ் அர்ச்சனா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் அர்ச்சனாவின் தந்தை பெயரான எம் சுரேஷ் குமார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த விண்ணப்ப படிவத்தில் நங்கவள்ளி முகவரிதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விண்ணப்ப படிவத்தில் நாமினி என்ற இடத்தில் எம் சுரேஷ் குமார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விண்ணப்ப படிவத்தில் 100% Nomination அவரது தந்தைக்கு கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான்.
2. மொத்தம் மூன்று நபர்கள் வரை நாமினேஷன் கொடுக்கலாம்.

அவர்களுக்கிடையே விகிதாச்சார அடிப்படையில் பிரித்து குறிப்பிடலாம். ஆனால் அவ்வாறு குறிப்பிடாமல் ஒரு நபருக்கு மட்டும் 100% என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 100% அப்பாவுக்கு கொடுத்ததாகத்தான் விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. மொத்தமுள்ள நான்கு நிரந்தர வைப்பீடு கணக்குகளிலும் மேற்கண்டவாறு 100% நாமினேசன் அவரது அப்பாவுக்கு கொடுத்ததாகத்தான் குறிப்பிட்டுள்ளார். மேற்படி நான் தாக்கல் செய்த ஆவணங்களில் எதிலும் கணவர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி நிரந்தர வைப்பீடுகளுக்கான முதிர்வு தேதி 18.09.2026 ஆகும். அதற்கு முன்பாகவே நிரந்தர வைப்பீடு முடிக்கப்பட்டு பணத்தை பெற்றுக் கொண்டார் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக முன்னதாகவே நிரந்தரவைப்பிடு முடிக்கப்பட்டதாக நான் தாக்கல் செய்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மருத்துவ அவசரத்திற்காக முடிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.56 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**